IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,

THIRUMANGALAM.

O.S.No.317/2008

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.45 PM.

வா.சா.1 சாட்சி பழனியாண்டி த.பெ.முனிச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 01.09.2025 in accordance with the provisions of Act XX141.**

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நாகர்கோவிலில் கூலி வேலை பார்க்கிறேன். எத்தனை வருடமாக நாகர்கோவிலில் வேலை பார்க்கிறேன் என்றால் சுமார் 30 வருடமாக வேலை பார்க்கிறேன்.

2. வழக்கில் என்ன சொல்லி இருக்கிறேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் கருப்பையாவுக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் எனது தகப்பனார் வழி உறவினர்கள் என்றால் எனது தாத்தா வழி உறவினர்கள் ஆவார்கள். எனது தாத்தா கருப்பையாவும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் சங்கிலித்தேவரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான்.

சங்கிலித்தேவரும் மற்றும் கருப்பையாதேவரின் தகப்பனார் பெயர் மூக்கத்தேவர் என்றால் சரிதான்.

4. கருப்பையாதேவரின் அப்பா பெயர் குறித்து எனது வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியிருப்பேன், எழுதாமல் விட்டிருப்பார்கள். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கணினி சிட்டாவில் உரிமையாளர் பெயர் கருப்பையா தந்தை சன்னாசி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ. 1 ல் உள்ளவாறு சன்னாசி மகன்தான் கருப்பையா என்று காட்டக்கூடிய வேறு ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வகையறாவில் சன்னாசி என்ற பெயரில் யாரும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர்த்து கருப்பையா பெயரில்தான் தாவா சொத்து உள்ளது என்பதை காட்டகூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இனிமேல் தாக்கல் செய்ய இருக்கிறோம்.

6. வா.சா.ஆ. 1 ல் உள்ள சன்னாசி யார் என்ற விபரத்தை எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக கணினி சிட்டாவில் இன்னாருடைய மகன் இன்னார் என்று இருக்கும் என்றால் கணினி சிட்டாவில் தவறாக உள்ளது. வா.சா.ஆ. 1 ல் தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சன்னாசி பெயர் மட்டும்தான் தவறுதலாக உள்ளது.

7. வா.சா.ஆ. 1 போலியான ஆவணம் என்பதால்தான் கருப்பையா மகன் சன்னாசி என்பதை திருத்தம் செய்து கருப்பையா தந்தை சன்னாசி என்று மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்

என்ன என்றால் சர்வே எண்.118 ஆகும். அதன் உட்பிரிவு மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது.

8. கருப்பையா பெயருக்கு பட்டா மாறுதலான உத்தரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கருப்பையா பெயருக்கு வரி செலுத்திய இரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கருப்பையாவிற்கு முத்தையா மற்றும் பொன்னுச்சாமி என்பவர்கள்தான் வாரிசுகள் என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. கருப்பையா காலத்திற்கு பிறகு பொன்னுச்சாமி மற்றும் முத்தையா சேர்ந்துதான் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்று காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முத்தையா வாரிசுகளை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாரிசு சான்றிதழ் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

10. எனது தந்தை வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய கணினி சிட்டாவில் உரிமையாளர் பெயர் கருப்பையா மகன் சன்னாசி என்றுதான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக முதன் முதலில் வா.சா.ஆ. 2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை தாசில்தார், துணை தாசில்தார், கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு அனுப்பினேன் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ. 2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு விபரங்கள் யார் கூறியது என்றால் நான்தான் கூறினேன். மேற்படி அறிவிப்பில் தாவா சொத்துக்கள் பாகபிரிவினை பத்திரத்தின் மூலமாக கருப்பையாவிற்கு கிடைத்தது என்றும் அதற்கு கிஸ்தி செலுத்தி வந்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. மேற்படி பாகபிரிவினை பத்திரத்தினையோ, கிஸ்தி ரசீதையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி அறிவிப்பில் முத்தையாவின் வாரிசுகள் முருகனும், பாண்டியும் தாவா சொத்துக்களில் அவர்களது பங்கினை விடுதலை பத்திரத்தின் மூலம் எழுதிகொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. மேற்படி விடுதலை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ. 2 வழக்கறிஞர் அறிவிப்பில் விடுதலை பத்திரம் எழுதிகொடுத்ததாகவும், அதற்கு முரணாக வழக்குரையில் வாய்மொழியாக சொத்தை பொறுத்து விடுதலை செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விடுதலை பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் அதை நான் தாக்கல் செய்யவில்லை.

14. வா.சா.ஆ. 2 வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்தை பொறுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய நான் விண்ணப்பித்திருப்பதாக தெரிவித்திருந்தேன் என்றால் சரிதான். நான் சொல்லும் விடுதலை பத்திரத்தில் முத்தையாவின் வாரிசுகளுக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் விபரம் கூறப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

15. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தாவா சொத்தை எந்த வருடத்தில் இருந்து அனுபவித்து வருகிறேன் என்ற விபரம்

சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள் வா.சா.ஆ3 ஆவணம் ஒப்புதல் அட்டையில் தாவா சொத்து பற்றி விபரங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் நான் படிக்காததால் தெரியவில்லை. வா.சா.ஆ3 ஒப்புதல் அட்டையில் தாவா சொத்து பற்றி விபரம் இல்லை என்றால் சரியல்ல.

16. 24.04.2008ம் தேதி ஜமபந்தியில் கொடுத்த மனுவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த மனுவின் பெயரில் பட்டா மாறுதல் எதுவும் மாற்றினார்களா என்றால் மாற்றவில்லை. தாவா சொத்தை மலிவான விலைக்கு கேட்டதாகவோ, அனுபவத்திற்கு இடையூறு செய்ததாகவோ காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கள்ளிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

17. மேற்படி புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் எனக்கு உரிமை எதுவும் இல்லை என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால்தான் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள பாகபிரிவினை பத்திரத்தினையும், விடுதலை பத்திரத்தினையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18. தாவா சொத்தில் கருப்பையாவோ, அவரது வாரிசுகளோ தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லாததால்தான் கிஸ்தி இரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வழக்கறிஞர் அறிவிப்பை 1, 2 பிரதிவாதிகளுக்கு

அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

19. தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்ததால்தான் எனக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யவில்லை என்றாலும் 2ம் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதாக கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை அளித்தார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு கருப்பையா காலத்தில் இருந்து நாங்கள் யாரும் வரி செலுத்தவில்லை என்றால் சரிதான்.

20. நாங்கள் ஒருபோதும் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லாததால்தான் வரி எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1934 ம் ஆண்டு ஆத்தங்கரை என்பவர் கிரையம் வாங்கிய சொத்து என்றால் அவர் யார் என்று தெரியாது. வா.சா.ஆ. 1 கணினி சிட்டாவில் UDR காலத்தில் தவறுதலாக கருப்பையா என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதை எனக்கு சாதகமாக பயன்படுத்தி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

21. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விபரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி வழக்கு சொத்து ஆத்தங்கரை தேவர் கிரையம் வாங்கிய சொத்து என்று எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது என்றால் இல்லை. யார் என்று தெரியாது. 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை விபரம் தெரிந்தும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

22. தாவா சொத்தை பொறுத்து ஆரம்பம் முதல் உள்ள வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்தால் வழக்கு சொத்து ஆரம்பத்தில் ஆத்தங்கரை தேவருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிந்துவிடும் என்பதற்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராதில் தாவா சொத்தின் நான்குமால் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாததால்தான் நான்குமால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல.

23. தாவா சொத்தின் சுவாதீனம் எனது வசம் இல்லை என்றாலும் 2ம் பிரதிவாதி வசம்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. கிஸ்தி 2ம் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் அவர் செலுத்திவரலாம், ஆனால் அனுவம் என் வசம் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 05.00 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.01 11:12:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.